# தமிழ் மக்களை இராணுவ ஆட்சியின் கீழ் வைத்திருப்பதே ஜே.வி.பியின் கொள்கை.

- செந்தமிழன்.

இனப்பிரச்சினையில் இப்பொழுது ஜே.வி.பியின் சுயரூபம் முற்றுமுழுதாக அம்பலத்துக்கு வந்துள்ளது.

42வருட வரலாறு கொண்ட ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) ஆரம்பம் முதலே ஒரு சிங்கள இனவாத கட்சியாகவே செயற்பட்டு வந்தபோதும், சிலருக்கு அவர்களது உண்மையான அரசியல் நிலைப்பாடு குறித்து குழப்பங்கள் இருந்து வந்தன. அதற்கு ஒரு காரணம் அவர்கள் சிவப்பு சட்டைகளைப் போட்டுக் கொண்டு தீவிரமாக சோஷலிசப் பிரச்சாரம் செய்து வந்தமையாகும். அவ்வியக்கத்தின் ஸ்தாபகர் ரோகண விஜேவீரா, இலங்கைத் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என சில சந்தர்ப்பங்களில் ஏற்றுக் கொண்டமை இன்னொரு காரணமாகும்.

ஆரம்ப காலத்தில் தமிழ் மக்களையும் தமது அணிகளில் திரட்ட வேண்டும் என்ற எண்ணம் ஜே.வி.பிக்கு இருந்தது என்பது ஏதோ உண்மைதான். அதன் காரணமாக பொன்சேகா என்பவர் யாழ்ப்பாண மாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு அவர் சுன்னாகத்தில் தங்கியிருந்து ஜே.வி.பியின் அரசியல் வேலைகளை முன்னெடுத்து வந்தார். வட மத்திய மாகாணத்தைச் சேர்ந்த பொன்சேகா தமிழில் சரளமாகப் பேசக் கூடியவராக இருந்தபடியால் தமிழ் மக்களுடன் நெருங்கி உறவாட முடிந்தது. யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பல தமிழ் இளைஞர்கள் ஜே.வி.பியால் ஈர்க்கப்பட்டனர். குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு ஜே.வி.பி மீது ஒரு நம்பிக்கை ஏற்பட ஆரம்பித்திருந்தது.

ஜே.வி.பி ஆரம்பத்தில் இந்திய விஸ்தரிப்பு வாதத்தை எதிர்ப்பது என்ற போர்வையில் இந்திய வம்சாவழி தமிழ் மக்களுக்கு எதிரான பிரச்சாரங்களை மேற்கொண்டு வந்த போதிலும், வடக்கு கிழக்கை தாயகமாகக் கொண்ட இலங்கையின் பூர்வீகத் தமிழ் மக்களுக்கு எதிரான பிரச்சாரங்களில் இறங்கவில்லை. 1971ம் ஆண்டு ஏப்பிரல் 5ம் திகதி ஜே.வி.பி தனது முதலாவது ஆயுதக் கிளர்ச்சியை நாடு தழுவிய ரீதியில் நடாத்தியது. அதற்கு முதல் நாள் ஏப்ரல் 4ம் திகதி வெள்ளவாயாவில் ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த ரோகண விஜேவீரா பொலிசாரால் கைது செய்யப்பட்டார். விஜேவீராவைக் கைது செய்த பொலிசார் அவரைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் பொருட்டு யாழ்ப்பாணம் சிறைச் சாலையில் அடைத்து வைத்தனர்.

ஜே.வி.பியின் ஆயுதக் கிளர்ச்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டம் பற்றிப் பேசிவந்த சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் நாடு முழுவதும் கைது செய்யப்பட்டனர். அக்கட்சியின் பொதுச் செயலாளர் நா. சண்முகதாசன் உட்பட பல தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்திலும் பலர் தேடப்பட்டனர். குறிப்பாக கிளிநொச்சியில் அக்கிராயன் பிரதேசத்தில் கோணாவில் என்ற இடத்தில் பயிற்சி முகாம் ஒன்றை நடாத்தி வந்த கம்யூனிஸ்ட்டுகள் தீவிரமாகத் தேடப்பட்டனர். பலரும் தலைமறைவாகி விட்டபோதிலும், முரசுமோட்டையில் ஒரு கிறிஸ்தவ மதபோதகர் கொடுத்த தகவல் காரணமாக அக்கட்சியின் 10 இளைஞர்கள் வரை கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் யாழ் சிறைச்சாலையில் ரோகண விஜேவீராவுடன் ஒன்றாகவே அடைக்கப்பட்டனர். இதன் காரணமாக விஜேவீராவுக்கும் அந்த இளைஞர்களுக்கும் இடையே நட்புறவும் புரிந்துணர்வும் ஏற்பட்டது. விஜேவீராவுக்கு அந்த இளைஞர்கள் சாரம், துவாய் போன்றவற்றை கொடுத்து உதவியதை பிற்காலத்தில் விஜேவீரா பெருமையுடன் பொதுக்கூட்டங்களில் கூறிவந்தார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த விஜேவிராவை சிறையை உடைத்து தப்ப

வைக்கும் முயற்சியில் சில ஜே.வி.பி இளைஞர்கள் ஈடுபட்டனர். இதற்காக அவர்கள் தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் சென்று, யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு அருகிலிருந்த யாழ் ஸ்ரேடியத்தில் நடைபெற்ற கிறிஸ்தவ மத ஆராதனை நிகழ்ச்சியொன்றைப் பயன்படுத்தி சிறை வளாகத்தில் புகுந்தனர். ஆனால் அவர்களால் ரோகண விஜேவீராவை மீட்க முடியாமல் போனதுடன் அவர்களில் பரை சிறைக்காவலர்களும் பொலிசாரும் சுட்டுக் கொன்றனர். எஞ்சியோர் தெற்கு நோக்கி தப்பியோடியபோது, ஆனையிறவு தடைமுகாமில் வைத்து சுழிபுரத்தைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் கதிர்காமநாதன் என்பவரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தின் பின் ரோகண விஜேவீரா யாழ் சிறையிலிருந்து மாற்றப்பட்டு ஊர்காவற்துறை கடலில் இருந்த கடற்கோட்டையான 'பூதத்தம்பி கோட்டை'யில் தனிமைச் சிறையில் கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டார். பிற்காலத்தில் 1977 தேர்தலில் வென்று ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையில் ஐ.தே.க ஆட்சி அமைத்த போது, ஜே.ஆர், ரோகண விஜேவீராவையும் அவரது தோழர்களையும் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்தார். அதன் பின்னர் ரோகண விஜேவீரா நாடு முழுவதும் சென்று பொதுக் கூட்டங்களில் பேசினார். யாழ்ப்பாணம் முற்றவெளியிலும் கிளிநொச்சி ரொட்றிக்கோ மைதானத்திலும் கூட ஜே.வி.பியின் இரண்டு பிரமாண்டமான பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன.

இக்கூட்டங்களில் கலந்துகொள்ள கார் மூலம் வடக்கே வந்த ரோகண விஜேவீரா வழியில் கிளிநொச்சிக்கு அருகாமையிலுள்ள முரசுமோட்டைக்குச் சென்று அங்கு தன்னுடன் யாழ் சிறையில் ஒன்றாக இருந்த தங்கத்துரை என்பவரின் வீட்டுக்கு விஜயம் செய்து, அவரது குடும்பத்தினருடன் அளவளாவியதுடன் அவரைத் தன்னுடன் அழைத்துச் சென்று யாழ் முற்றவெளிக் கூட்டத்தில் தன்னுடன் மேடையில் இருத்தி மக்களுக்கு அறிமுகம் செய்து கௌரவித்தார். அதேபோல கிளிநொச்சிக் கூட்டத்திலும் தன்னுடன் சிறையில் உடனிருந்த தமிழ் இளைஞர்களை அறிமுகம் செய்தார். சிறையில் அவருடன் இருந்த இன்னொருவரான சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் முரசு மோட்டைப் பொறுப்பாளரான பா. கணேசபிள்ளை என்பவர் பின்னர் ஜே.வி.பியுடன் இணைந்து அதன் கிளிநொச்சிப் பொறுப்பாளரானதுடன் இந்தக் கூட்டத்திற்கும் தலைமைதாங்கினார்.

இந்த இரு கூட்டங்களிலும் பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் திரண்டதற்கு சில காரணங்கள் இருந்தன. தென்னிலங்கையின் இரண்டு பிரதான ஆளும் கட்சிகளாலும் இனரீதியாகப் புறக்கணிக்கப்பட்டு தமிழ் தலைமைகளினாலும் ஏமாற்றப்பட்ட ஒரு சூழ்நிலையில் ஜே.வி.பி ஒரு புதிய, அனைவருக்கும் நீதியும் சமத்துவமும் வழங்கும் ஒரு பாதையைக் காட்டும் என்ற நம்பிக்கை பெருவாரியான தமிழ் இளைஞர்களுக்கு இருந்தது. தமிழ் மக்களின் ஒரு பிரிவினரான தாழ்த்தப்பட்ட மக்கள் ஜே.வி.பி அதிகாரத்துக்கு வந்தால் அவர்கள் தலைமையில் அமையும் சமதர்ம சமுதாயத்தில் தமக்கு ஒரு நிரந்தர விடிவு அதாவது சாதி ஒடுக்கு முறையும் தீண்டாமையும் ஒழியும் என நம்பினர். இந்தக் கூட்டங்களில் உரையாற்றிய ரோகண விஜேவீராவும் தாம் ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களின் பிரச்சினையை முதலிடம் கொடுத்து தீர்ப்பதாக உறுதி மொழிகளை வழங்கினார்.

ஆனால் இவை எல்லாம் ஜே.வி.பியின் ஒரு பக்கம் தான். அதன் மறுபக்கம், அதாவது உண்மையான பக்கம் இலங்கையில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பமான பின்னரே வெளிச்சத்துக்கு வருகின்றது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பமான பின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக முதன் முதலில் எடுக்கப்பட்ட முயற்சி இந்திய - இலங்கை உடன்படிக்கையாகும். இந்த ஒப்பந்தத்தை ஜே.வி.பி எதிர்த்ததுடன் அதன் கீழ் உருவாக்கப்பட்ட மாகாணசபை முறையையும் அது கடுமையாக எதிர்த்தது. (பின்னர் மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட்டு அதன் உறுப்பினர்களாகவும் இன்று இருக்கின்றனர்) இந்திய எதிர்ப்பைத் தூண்டி இந்தியப் பொருட்கள் பகிஷ்கரிப்பு இயக்கத்தையும் கொண்டு நடாத்தினர். ஆர். பிரேமதாசவும் இவர்களுடைய கருத்துடனேயே செயல்பட்டார். 1988 – 89 காலப்பகுதியில் ஜே.வி.பி தென்னிலங்கையில் மேற்கொண்ட படுகொலைகளின் எதிர்வினையாக பிரேமதாச அரசும் பல்லாயிரக் கணக்கான சிங்கள இளைஞர்களை ஜே.வி.பியுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறி படுகொலைசெய்தது. சுமார் 60,000பேர் வரையில் இருபகுதியினராலும் கொலை

செய்யப்பட்டனர். இறுதியாக ரோகண விஜேவீரா உட்பட ஜே.வி.பியின் அனைத்துத் தலைவர்களும் (இன்றைய சோமவன்ச அமரசிங்க நீங்கலாக) பிரேமதாச அரசால் அழித்தொழிக்கப்பட்டனர்.

அதன் பின்னர் சாம்பல் மேட்டிலிருந்து முளைத்த தலைமையாக இன்றைய சோமவன்ச – விமல் வீரவன்ச – ரில்வின் சில்வா தலைமை கிளம்பியது. ஜே.வி.பியின் இன்றைய தலைமை அதன் முன்னைய தலைமையிலும் பார்க்க மோசமான சிங்கள இனவாத தலைமையாக தன்னை தகவமைத்துக் கொண்டுள்ளது. இன்றைய ஜே.வி.பியுடன் சிறுபான்மைத் தேசிய இனங்களைச் சேர்ந்த வடக்கு கிழக்கு தமிழ் மக்களோ, முஸ்லீம் மக்களோ இணைவதற்குத் தயாராக இல்லை. இந்திய வம்சாவழித் தமிழரான இராமலிங்கம் சந்திசேகர் என்பவரை ஜே.வி.பி தனது தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமித்தாலும், மலையக தமிழ் மக்கள் ஜே.வி.பியை நம்பத் தயாராக இல்லை.

சந்திரிகா அரசாங்கம் 11 வருடங்களாக எடுத்த இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அத்தனை நடவடிக்கைகளையும் ஐ.தே.கவுடன் இணைந்து இன்றைய ஜே.வி.பி தலைமை எதிர்த்தே வந்திருக்கின்றது. சர்வதேச மத்திஸ்த முயற்சிகளையும் எதிர்த்துவந்துள்ளது. மகிந்த ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது அவரை ஆதரிப்பதற்கு நிபந்தனையாக அவர் ஒற்றையாட்சி நிலைப்பாட்டில் நிற்க வேண்டும் எனக் கோரி அவ்வாறே நிற்கவும் வைத்தது. மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக வந்தபின் இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக கலந்துரையாடுவதற்காக சர்வகட்சி கூட்டத்தை உருவாக்கியதையும் நிபுணர் குழு நியமித்ததையும் எதிர்த்த ஜே.வி.பி, அவற்றில் பங்குபற்றாது புறக்கணித்ததுடன் மகிந்தவின் அரசுக்கான ஆதரவையும் விலக்கிக் கொண்டது. மகிந்த அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இல்லாமையால் ஒரு பக்கத்தில் ஐ.தே.கவும் இன்னொரு பக்கத்தில் ஜே.வி.பியும் அரசை மிரட்டி பிளாக் மெயில் அரசியல் செய்து வருகின்றன.

ஆனால் ஐ.தே.க ஆளும் கட்சியாக இருந்ததுடன் பிரதான எதிர்க்கட்சியாகவும் இருப்பதினால், இன்றைய விகிதாசார தேர்தல் முறையை மனதில் கொண்டு செயற்படுகின்றது. அதாவது இலங்கையின் சனத்தொகையில் 30 வீதமாக இருக்கும் தமிழ், முஸ்லீம் மக்களைப் பகைத்துக் கொண்டு தேர்தலில் வென்று ஆட்சிக்கு வரமுடியாது என்று ஐ.தே.கவுக்குத் தெரியும். எனவே சிறுபான்மை தேசிய இனங்களை ஏமாற்றும் வகையில் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் நியாயமான அரசியல் தீர்வு காண வேண்டும் எனக் கூறிவருகின்றது. (ஆனால் நடைமுறையில் தீர்வு முயற்சிகளை எதிர்க்கும் என்பதற்கு அக்கட்சி 1957ல் பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன் படிக்கையையும் 2000 ம் ஆண்டில் சந்திரிகா கொண்டுவந்த தீர்வு முயற்சிகளையும் குழப்பி முறியடித்தது சான்று)

ஆனால் ஜே.வி.பியோ சூழ்நிலை நிர்ப்பந்தம் காரணமாக இரட்டை வேடம் போடக்கூடத் தயாரில்லை. அப்பட்டமாகவே தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளை எதிர்த்துவருகின்றது. அண்மைக் காலத்தில் அதன் தமிழின விரோத நடவடிக்கைகள் உச்சக் கட்டத்தை எட்டி உள்ளன. மகிந்த ராஜபக்ச நியமித்த சர்வகட்சி கூட்டமுடிவுகளும் நிபுணர் குழுவினர் அறிக்கைகளும் வெளிவருவதற்கு முன்னரே அவற்றை நியமித்த செய்கையையே ஜே.வி.பி எதிர்த்தது. இனப்பிரச்சினை பற்றி ஆராயவே கூடாது என்பதுதான் அதன் கொள்கை. அதாவது இலங்கையில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை, பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே உள்ளது என்பதுதான் ஜே.வி.பி முன்வைக்கும் வாதம். ஆனால் அதற்கு முன்னதாக ஜே.வி.பி மக்களை ஏமாற்ற வேறுவிதமாக கதையளந்து வந்தது. இனப்பிரச்சினை சம்பந்தமாக பெரும்பான்மையான மக்கள் எடுக்கும் முடிவை அது எதுவாக இருந்தாலும் தமது கட்சி எற்றுக்கொள்ளும் என்று கூறிவந்தனர்.

அடுத்ததாக வடக்கு – கிழக்கு தற்காலிக இணைப்புக்கு எதிராக ஜே.வி.பி நீதிமன்றம் சென்று வெற்றியும் பெற்றது. சில சட்டப் பிரச்சினைகள் சம்பந்தமாக ஜே.வி.பி அவ்வெற்றியைப் பெறுவதற்கு தென்னிலங்கையின் பிரதான கட்சிகள் இரண்டும் அந்நிலைப்பாட்டில் நின்றதும் ஒரு காரணம். ஏனெனில் தமிழ் மக்கள் செறிந்தும் பாரம்பரியமாகவும் வாழும் வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் பிரதேசங்களை இணைத்து சுயாட்சி அடிப்படையில் ஒரு தீர்வைக் காண்பதை ஐ.தே.க, சிறீ.ல.சு.க, ஜே.வி.பி என எல்லா தென்னிலங்கைப் பிரதான கட்சிகளும்

விரும்பவில்லை. ஆனால் ஜே.வி.பியை முன்னுக்குத் தள்ளி மற்றைய கட்சிகள் மறைந்து கொள்கின்றன. ஆனால் மற்றைய இரு கட்சிகளையும் விட மார்க்சிசம், சோஷலிசம் எனப் பேசித் திரியும் ஜே.வி.பி இவ்வாறு இனவாத அடிப்படையில் செயற்படுவதுதான் சுத்தமான மோசடித்தனமாகும்.

மேலும் சற்றுதூரம் சென்று பார்ப்போமானால், ஜே.வி.பியின் சிங்கள இனவாதப் போக்கு மென்மேலும் அம்பலத்துக்கு வரும். வடக்கு கிழக்குப் பகுதிகளை புலிப் பயங்கரவாதிகளிடமிருந்து விடுவித்து அங்குள்ள தமிழ் மக்களுக்கு ஜனநாயக வாழ்வை வழங்க வேண்டும் என ஜே.வி.பி அழகாகப் பேசி வந்தது. அவ்வாறே அரசாங்கம் கிழக்கு மாகாணத்தை புலிகளிடமிருந்து விடுவித்து அங்கு ஜனநாயக வாழ்வை மலர வைப்பதில் முதற்படியாக உள்ளூராட்சி சபைத் தேர்தலை அண்மையில் நடாத்தியது. அத் தேர்தலில் புலிகளின் பினாமி அமைப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த தமிழ் ஜனநாயகக் கட்சிகள் போட்டியிட்டதுடன், பலவிதமான நெருக்கடிகளுக்கு மத்தியில் 56 வீதமான மக்களும் வாக்களிப்பில் கலந்து கொண்டனர். இத் தொகை நிச்சயம் வருங்காலத்தில் மேலும் அதிகரிக்கும். ஆனால் ஜே.வி.பி இத்தேர்தலில் போட்டியிட்ட தமிழ் ஜனநாயக சக்திகளை இந்தியாவின் கையாட்கள் என கொச்சைப் படுத்தி அவதூறு செய்துள்ளது. ஐ.தே.கவும் இதே பாணியில் ஒரு பயங்கரவாதியை (புலிகளை) அப்புறப்படுத்திவிட்டு வேறொரு பயங்கரவாதிகளிடம் நாட்டை அரசாங்கம் ஒப்படைத்து விட்டுள்ளது என வசைபாடியது. அதாவது ஜே.வி.பியையும் ஐ.தே.கவையும் பொறுத்தவரையில் தமிழ் கட்சிகள் அனைத்தும் பயங்கரவாதிகளாகவும், இந்தியாவின் கையாட்களாகவுமே காட்சியளிக்கின்றனர்.

வடக்கு கிழக்கில் மாகாண சபைத் தேர்தல்கள் நடாத்தப்படுவதையும் ஜே.வி.பியும் ஐ.தே.கவும் எதிர்க்கின்றன. கிழக்கில் மாகாணசபைத் தேர்தல் நடாத்தக்கூடிய சூழல் இருந்தாலும், வன்னியைப் புலிகளிடமிருந்து விடுவிக்காதவரை வடக்கில் அதற்கான வாய்ப்பு இல்லை என்றபடியால், அங்கு முதலில் இடைக்கால சபையொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் முடிவெடுத்தது. ஆனால் அதையும் ஜே.வி.பி வன்மையாக எதிர்க்கின்றது. ஆனந்தசங்கரி, டக்ளஸ் தேவானந்தா, சித்தார்த்தன் போன்றோரிடம் வடக்கின் இடைக்கால சபையின் தலைமைப் பொறுப்பைக் கொடுப்பது, ஆயுதம் தாங்கிய புலிகளிடமிருந்து ஆயுதம் தாங்காத புலிகளிடம் அதிகாரத்தைக் கொடுப்பதற்கு ஒப்பானதாகும் என ஜே.வி.பி அறிவித்துள்ளது. இது சிங்கள இனவாதத்தின் உச்சக்கட்டமே தவிர வேறல்ல. ஏனெனில் ஜே.வி.பி கூறும் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் தமிழ் ஈழக் கோரிக்கையையும் ஆயுதப் போராட்டத்தையும் எப்போதோ நிராகரித்துவிட்டு ஜனநாயக அரசியலில் ஈடுபடுபவர்கள். இவர்கள் புலிகளின் கொலைப் பட்டியலில் முன்வரிசையில் இருப்பவர்கள். இவர்களையே புலிகள் என ஜே.வி.பி முத்திரை குத்துமானால், ஜே.வி.பியின் சிங்கள இனவாத நோய் தீர்க்க முடியாத அளவுக்கு முற்றிவிட்டது என்றுதான் அர்த்தம்.

சமஷ்டி, பிராந்திய சுயாட்சி என்பவற்றை விடுவோம். சாதாரணமாக தென்னிலங்கையில் செயல்படும் மாகாணசபை, உள்ளூராட்சி சபைகள் கூட வடக்கு கிழக்கில் செயற்படக்கூடாது என்ற ஜே.வி.பியின் வாதத்தைப் பார்த்தால், தமிழ் மக்களுக்கு எவ்விதமான ஜனநாயக கட்டமைப்புகளும் வழங்கப்படக்கூடாது என்பதே ஜே.வி.பியின் நிலைப்பாடாகும். அப்படியானால் இருக்கின்ற ஒரே வழிமுறை தமிழ் மக்களை தொடர்ந்தும் இராணுவ ஆட்சியின் கீழ் வைத்திருப்பதுதான். இதனை இன்னொரு வழியில் கூறினால் புலிகள் நடாத்தும் தனிநாட்டுப் போராட்டம் தான் தமிழர்களுக்கு சரியான தீர்வென, அவர்களை புலிகள் பக்கம் தள்ளிவிடுவதுதான் ஜே.வி.பியின் நிலைப்பாடாகும்.

இனப்பிரச்சினை விடயத்தில் ஜே.வி.பிக்கு சரியான நிலைப்பாடு இல்லை என்பது இதன்மூலம் நிருபணம் ஆவது ஒரு பக்கம் இருக்க, இலங்கையின் தேசிய அரசியலிலும் ஜே.வி.பிக்கு ஒரு தெளிவான நிலைப்பாடு இல்லை என்பது நிரூபிக்கப்பட்டு வருகின்றது. பொதுவாக இலங்கை இடதுசாரி கட்சிகள் அனைத்தினதும் பாரம்பரிய நிலைப்பாட்டின்படி, ஐ.தே.கவே இலங்கை மக்களின் முதலாம் நம்பர் எதிரி. அதாவது பிரதான விரோதியாகும். ஆனால் ஜே.வி.பி தன்னை இடதுசாரிக் கட்சி என்று சொல்லிக்கொண்டாலும், இனப்பிரச்சினை விடயத்தில் ஐ.தே.கவின் நிலைப்பாட்டையும் விட மேலும் மோசமான நிலையை எடுப்பதுடன், ஐ.தே.கவுடன் கைகோர்த்தும் செயற்பட்டு வருகின்றது. இது மறைமுகமாக புலிகளுடனும் உறவு கொள்வதைப் போன்றது. ஏனெனில் ஐ.தே.கவுக்கும் புலிகளுக்கும் உள்ள கள்ள

உறவும், இவர்கள் இருவருக்கும் ஏகாதிபத்திய சக்திகளுடன் உள்ள பகிரங்க உறவும் பகிரங்க இரகசியம்.

ஜே.வி.பி என்ன தான் புலி எதிர்ப்பு சக்தி என்று வாய்ச் சவடால் அடித்தாலும் நடைமுறையில் புலிகளின் இருப்பையும் செயற்பாடுகளையும் நியாயப்படுத்தும் வகையிலேயே இருந்து வருகின்றது. ஒருவரின் வாய்ப்பேச்சை விட நடைமுறையில் அவர் என்ன செய்கின்றார் என்பதே அவரைப் பற்றிய முடிவுக்கு வர உதவும். அப்படிப் பார்த்தால் ஜே.வி.பியின் ஒவ்வொரு செயற்பாடும் புலிகளுக்கு பிராணவாயு ஏற்றுவதாகவே இருக்கின்றது.

புலிகளுக்கும் ஐ.தே.கவுக்கும் உள்ள உறவும், ஜே.வி.பிக்கும் ஐ.தே.கவுக்கும் உள்ள உறவும், புலிகளினதும் ஜே.வி.பியினதும் இந்திய விரோதமும் (ஐ.தே.கவுக்குள் இது நீறு பூத்த நெருப்பாக இருக்கின்றது) இவர்கள் மூவரையும் அரசியலில் ஒரே நேர்கோட்டில் கொண்டு வருகின்றது. இந்த மூன்று அரசியல் சக்திகளினதும் கடந்த காலநிகழ்கால பாசிச செயற்பாடுகளும் இவர்களின் ஒத்த தன்மையையே எடுத்தியம்புகின்றது. இவர்கள் பேசும் இனவாதம் வெவ்வேறு தொனியில் இருந்தாலும், இவர்கள் மூவரும் அடிப்படையில் இனவாதப் பாசிசவாதிகளே.

புலிகள், ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பியினது இந்த நிலைப்பாடு இலங்கை மக்களின் பிரதான எதிரிகள் இவர்கள் தான் என்பதை தெளிவாக இனங்காண உதவுகின்றது. எனவே நமது நாட்டின் தமிழ், சிங்கள, முஸ்லீம் முற்போக்கு சக்திகளும் ஜனநாயக சக்திகளும் இந்த மோசமான எதிரிகளை எதிர்த்துப் போராடுவதற்கு மக்களை அணிதிரட்டுவது அவசியம். இவர்களது அரசியலில் எதிரும் புதிரும் போன்று தோற்றமளிக்கும மாயைகளை, புரட்சிகரமான அரசியல் சக்திகள் மக்களுக்கு அம்பலப்படுத்துவது அவசியம். குறிப்பாக சிவப்பு கொடிகளுடனும், மார்க்சிச தலைவர்களின் படங்களுடனும், புரட்சிகர கோஷங்களுடனும் மக்களை ஏமாற்றிக் கொண்டு நடைமுறையில் அவற்றுக்கெதிராக மக்கள் விரோத, எதிர்ப்பரட்சி செயற்பாடுகளில் ஈடுபடும் ஜே.வி.பியை மக்கள் முன் அப்பலப்படுத்துவது அவசியம். ஏனெனில் ஹிட்லரும் புலிகளைப் போல் தேசியமும், ஜே.வி.பியைப் போல தேசிய சோஷலிசமும் பேசியவன்தான். ஆனால் நடைமுறையில் அவன் பாசிசத்தை நடைமுறைப்படுத்தினான். அதையே நமது நாட்டு ஹிட்லரின் வாரிசுகளான புலிகளும் ஜே.வி.பியும் செய்து வருகின்றனர். எனவே இந்த நச்சுக் களைகளை கிள்ளியெறிவதற்கு நாம் அனைவரும் இன, மத, மொழி வேறுபாடின்றி ஒன்றுபடுவது அவசியம்.